


# காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 தை 21 (3-2-74) | இதழ்: 30


★

உள்ளே......


பதவிக்கு வந்த பிறகும்...
(அண்ணாவின் சொற்பொழிவு)

★

அண்ணா நினைவு அஞ்சலி
(தலையங்கம்)

★

அண்ணா பற்றிய சில நினைவுகள்
(கட்டுரை)

★

உத்தரவாதமில்லாதவள்
(சிறுகதை)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)




★


விலை : 0-25 காசு

## அண்ணியார் அவர்களின் அறிக்கை

"தம்பி கலைஞர் கருணாநிதி 27—1—74 அன்று என்னை சந்தித்தார். [சமீபத்தில் காலாவதி ஆக இருந்த என்னுடைய மேலவை உறுப்பினர் பதவியை புதுப்பித்து தந்ததற்கு நான் அவருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மீண்டும் தொடர்ந்து நான் தி. மு. கழக உறுப்பினராக இருப்பேன் என்பதையும், என் குடும்பத்தாரோடு கழகப் பணி ஆற்றுவேன் என்பதையும், தம்பி கலைஞரிடம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்."

## "சிதம்பரத்துச் சிங்கமே! மங்காது உன் நினைவு!"

(தென்னம்பட்டு. ஏகாம்பரம்)

செந்தமிழ் மொழிகாக்க சிந்திய உன்ரத்தம்
இந்தி வெறியர்க்கு எரிமலையாய் ஆனதடா!

துப்பாக்கி ரவைமழையில் துளிர்விட்ட மொழிப் பற்றில்
கொப்பளித்த குருதியுடல் தொழுஉரமாய் ஆனதடா!

சிட்டுக்குருவியென சிதம்பரத்தில் உனைச்சுட்டார்
எட்டுத் திக்கிலுமே எழுந்ததுவே தமிழர்படை!

குரங்கிடமா மாலையென குமுறி எழுந்தார்கள்
அரசையே மாற்றி அன்னைமொழி காத்தார்கள்!

மழைக்கண்ணீர் காட்சியது! மாத்தமிழர் நெஞ்சத்தில்
தழல்விட்டெரியும் தணியா தீபமது!

வண்டமிழ்த் தாயிங்கே வாழ்வாங்கு வாழ்வதை
கண்திறந்து பார்க்காமல் கனவாகிப் போய் விட்டாய்!

ராஜேந் திரா!உன் இனிய கனவுகள்
ரோஜாவின் மணமாய் எங்கும் வீசுதடா!

சிங்கத் தமிழ்மகனே! சிதம்பரத்துச் சோதரனே!
மங்காது உன்நினைவு மாத்தமிழ் உள்ளவரை!

## கலைஞர் அவர்களின் மகிழ்ச்சி



"அண்ணியார் அவர்களின் அறிக்கை என்னை அகமகிழ வைத்தது. குடும்பப் பாசம் வெற்றி பெற்றது என்ற பூரிப்போடு, அண்ணியார் அவர்கள் எடுத்த முடிவினை நான் வரவேற்கிறேன்.

நானும் அண்ணியார் அவர்களை சந்தித்து என்னுடைய மகிழ்ச்சியை நேரிடையாக தெரிவித்துக்கொண்டேன்."

ஆதிக்க இந்தியினை எதிர்த்து தொடக்க காலத்திலேயே குரல் கொடுத்தவரும், **'திராவிட நாடு'** இதழின் பொறுப்பாசிரியராக இருந்தவரும் **பேரறிஞர் அண்ணா** அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவருமான

## ஈழத்து அடிகள்

27—1—74 ஞாயிறன்று காஞ்சிபுரத்தில் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்துகின்றோம்; ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

—ஆசிரியர், காஞ்சி.

காஞ்சி வார இதழ்
நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 3—2—74 | இதழ் 30

# அண்ணா நினைவு அஞ்சலி

ஐந்து ஆண்டுகள் உருண்டோடி விட்டன,

ஆளாக்கிய அண்ணன் நம்மை மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு அலைகடலோரம் துயில்கொள்ளச் சென்று!

ஆண்டுகள் ஐந்து முடிவுறினும் அவர் நினைவுகளே, நம் நெஞ்ச அலைகளாக என்றென்றும் நிலைத்திருக்கின்றன.

வீழ்ச்சியுறு தமிழகத்தின் எழுச்சிக்கு வித்திட்ட எழுத்துச் சிங்கம்;

விசையொடிந்த தேகத்தில் வீரத்தைப் பாய்ச்சிய தமிழ் இன வேங்கை;

சூழ்ச்சியினை வஞ்சகத்தை பொறாமை தன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கிய சொற்பொழிவுக் கூர்வாள்;

நாலு கோடித் தமிழர்களின் நல்வாழ்வுக்கு வழி காண வந்த நல்லறிவுச் சுரங்கம்;

இலட்சக்கணக்கான தம்பிமாரை ஒன்றாக இணைத்து — பாசத்தால் பிணைத்து — கழகக் குடும்பம் கண்ட—தாய்மை நெஞ்சங் கொண்ட தனிப் பெருந் தலைவன்—

**பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாள்—பிப்ரவரி, மூன்று!**

வங்கக் கடலோரம் அவர் ஓய்வு கொண்டிருந்தாலும், நம் நெஞ்சக் கடலோரம் நீக்கமற நிறைந்து நிலைத்து வழிகாட்டும் கலங்கரை விளக்கமென ஒளிர்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

கொட்டும் மழையில் சொட்டும் கண்ணீர்த் துளிகளோடு அவர் கண்ட 'கழக'த்தைக் காக்க—

அடக்குமுறை 'பக்த'ர்களை அகற்றி, ஆதிக்க இந்தியினை விரட்டி அவர் அமைத்த 'அரசை'க் கட்டிக் காக்க—

ஓய்வின்றி தமிழின உயர்வுக்காக நாளெல்லாம் உழைத்த அந்த உத்தமர் கண்ட 'உதய சூரியன்' புகழ் ஒளி காக்க—

நாம் ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக் கொள்வதுதான், அந்த உயிர்த் தலைவன் நினைவோடு உண்மையாகப் பணியாற்றுகிறோம் என்பதனை உறுதிப்படுத்துவதாக அமையும்.

உறுதியினை மேற்கொள்வோம்; உத்தமத் தலைவன் பேரறிஞர் அண்ணாவின் நினைவு, நம்மை என்றென்றும் வழிநடத்த நம் கடமையைச் செய்வோம், கண்ணியத்துடன் கட்டுப்பாடு மறவாமல்!

அதைத்தான், அமைதியாய் உறங்கும் அண்ணன் மட்டுமன்று, அவர் வழி நடக்கும் கலைஞரும் நாவலரும் நம்மிடம் எதிர்பார்க்கிறார்கள்.

அண்ணன் நினைவு நாள்—

அறிவுலக மன்னன் நினைவு நாள்—

பிப்ரவரி மூன்று!

அந்நாளில், அனைவருக்கும் இடங்கொடுத்த பரந்த இதயத்தை—

'வாழ்க வசவாளர்' என வாழ்த்திய இதயத்தை—

'மறப்போம்; மன்னிப்போம்' என்ற மணி வாசகம் படைத்த மாபெரும் இதயத்தை—

'மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்' என்று மதித்த இதயத்தை—

எதையும் தாங்கிப் பழக்கப்பட்ட அந்த நல்ல இதயத்தை—

**நம் இதயத்தில் வைத்து என்றும் வணங்குவோம்!**

நம் இதய அஞ்சலியை நினைவு அஞ்சலியாய்ப் படைப்போம்!

அவர் 'இதயம்' விழைந்த கொள்கைவழி நடக்க உறுதி கொள்வோம்!

**—மணிவேந்தன்**

# பதவிக்கு வந்த பிறகும்...

தி. மு. கழகத்தவர், தாங்கள் குடும்பத்தின் மூத்தவன் முதலமைச்சராகியிருப்பது குறித்து அவர்கள் தம் ஆசை ஈடேற்றம் கண்டுவிட்டதன் காரணமாகத் துள்ளிக்குதிக்கின்றனர். ஆனால் எத்தனைப் பெரிய பளுவை நான் தாங்கிக்கொண்டிருக்கிறேன்; பதவியேற்பிற்கு முன் இரவு நான் தூங்கவே இல்லை பிறகு இன்றுவரை நாள் ஒன்றுக்கு நான்கு மணி நேரம்கூட நான் தூங்குவதில்லை.

தி. மு. கவினர் கடந்த இரண்டாண்டுகளாக நாம் பதவிக்கு வருவது உறுதி என்று பேசும் பொழுது எனக்கு எரிச்சல்தான் ஏற்பட்டது; இப்படி ஏற்படாவிட்டால் எப்படியிருக்கும் என்றுதான் எண்ணி வந்தேன். மழைவரும் என்று கிராம விவசாயி இயற்கையான தனது நுண்ணறிவால் கூறுவதைப் போன்று தி. மு. கவினர் கூறிவந்தனர் என்பது தேர்தல் முடிவுகள் காட்டிவிட்டன.

தேர்தலில் வெற்றிபெற்ற தி. மு. கவினரில் 28 வழக்கறிஞர்கள் 2 பொறியியல் வல்லுனர்கள் 15 பி. ஏ. எம். ஏக்கள். 5 அல்லது 6 வணிகர்கள். 40 அல்லது 50 விவசாயிகள் உள்ளனர்.

பதவி பெற்ற பிறகும், நான் அதே சட்டை, உடை, நடையுடன் இருப்பதைப் பார்த்திடும் சிலர் வருத்தப்படுகின்றனர்; பதவிக்கு வந்த பிறகும்கூட ஒரு வித வித்தியாசமும் இருக்கக்கூடாதென்பதில் நாங்கள் கண்டிப்பாகவே இருக்கிறோம்.

தி. மு. கவினர் எத்தனை எத்தனை அறப் போராட்டங்கள், தடியடிகள், இழி மொழிகள் இன்ன பிறவற்றைத் தாங்கிப் பயணம்வந்தோம். 15 சட்டமன்ற உறுப்பினர் 50 ஆக உயர்ந்தவுடனேயே, எப்படி இவர்கள் வந்தனர். மக்கள் ஏன் இந்தச் சாமானியர்களை ஆதரித்தனர் என்று வியப்பில் ஆழ்ந்தனர் காங்கிரசார். 1967-ம் ஆண்டு தேர்தலில் தி. மு. க. வினர் வரலாறு முடிவாக்கப் பெற்றுவிடும் என காங்கிரசு பெருந்தலைவர் திரு. காமராசர் பேசினார்; படுத்துகொண்டே காங்கிரசு வெற்றி பெறும் என்றார்.

30 ஆண்டு அனுபவமும் தேர்தலில் வல்லவர் என்ற பெயர் பெற்றவருமான திரு. காமராசர் பேசியதைக் கண்டு 50 இலட்சம் 1 கோடி என்கிற அளவில் தேர்தல்நிதி வைத்திருக்கின்றனரே, ராஜாக்களும், ஜமீன்தார்களும், ஆயிரமாயிரம் பேர்கள் "ஆண்டே! ஆண்டே!" என்று சுற்றியபடி இருக்கும் நிலப்பிரபுகளும் காங்கிரசு பக்கம் வரிந்து கட்டி நிற்பதையும் பார்த்து, எனக்கே அச்சமாகத் தான் இருந்தது.

எப்படி ஜெயிப்பீர் என்று கூறிய காங்கிரசார், தேர்தல் சூருவளிக்குப் பின் எத்தனை நாளைக்கு பதவியிலிருக்க முடியும் என்று கேட்கத் தலைப்பட்டு விட்டனர். எத்தனை நாளைக்கு இருந்தால் மக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ அத்தனை நாளைக்கு இருப்பேன். இத்தனை நாளைக்கு இருந்தேயாக வேண்டும் என்று ஒட்டிக்கொண்டிருக்க மாட்டேன்; எந்த நிமிடம், மக்களுக்கு நன்மை செய்ய முடியவில்லை என்று நினைக்கிறேனோ அடுத்த விநாடியே பதவியை உதறி எறிந்துவிட்டு விலகுவேன்.

ஒருவருடம் இரண்டு வருடம் பொறுத்திருந்து காங்கிரசார் கணக்குப் பார்த்திருந்தால் நான் வரவேற்றிருப்பேன். மார்ச் மாதம் 6-ம் தேதியே என்ன செய்துவிட்டார்கள் என்று திரு. பக்தவச்சலம் கேட்டார். 20 வருடம் பதவியிலிருந்தவர் 24 மணி நேரத்திற்குள் கேட்கத் துணிகிறார். நாங்கள் ஒன்றும் புகழால் அர்ச்சிக்கப் பெற்றவர்களல்லர். வெட்டவெளியில், கொட்டும் மழையில் பிறந்தோம். ஏச்சையும், இழிவுபேச்சையும் கத்திக் குத்துகளையும், படுகொலையும் சதிகளையும் மிரட்டல்களையும் ஏராளமாக சந்தித்தவர்கள் நாங்கள்.

எங்களை மக்கள் பதவியில் அமர்த்தியுள்ளனர் எனில், எங்கள் தனித் திறமையைக் கண்டல்ல 20 வருட ஆட்சியின் பயனால் 20000 கோடி ரூபாயைப் பாழாக்கியதன்றி கள்ளமார்க்கட்காரரைக் கொழுக்க வைத்ததற்கும், கொள்ளைக்கூட்டத்தினருடன் கூடிக் குலவியதற்கும். ஒரே முடிவிற்குக் கொண்டுவரவும் இவர்கள் பிடியிலிருந்து தப்பவுமே மக்கள் உள்ளத்திலே ஒரு யாகத் தீ போன்று உணர்ச்சி ஏற்பட்டு, இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் நன்கு உணர்வேன்.

(குடந்தையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா சொற்பொழிவு)



# எழுத்துலகில் அண்ணா

— புலவர் தி. நா. அறிவுஒளி

பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகவும் விரும்பி ஈடுபாடு காட்டிவந்த எழுத்துலகம், வீரமுள்ள உலகமாக வேண்டும் என எண்ணினார். செங்கற்பட்டு மாவட்ட எழுத்தாளர்கள் ஒன்றுகூடி எழுத்தாளர் கழகம் அமைக்க வேண்டுமென அண்ணா கருதினார். அவர் போலவே முதுபெரும் எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன் போன்றோரும் கருதினர். இதனால் செங்கற்பட்டு மாவட்ட எழுத்தாளர் கழகத் தொடக்க விழா 2—12—1961இல் வில்லிவாக்கத்தில் நிகழ்ந்தது. புகழ்மிக்க எழுத்தாளர்களான திரு. த. நா. குமாரசாமி, திரு. பி. எம். கண்ணன், திரு. அழகரடிகளார், திரு. நெ. து. சுந்தரவடிவேலர், திரு. சீதர், திரு. டி. எம். பார்த்தசாரதி, திரு. கா. வேழவேந்தன், திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி போன்றோரும் பல இளம் எழுத்தாளர்களும் அவ் விழாவில் ஆர்வத்தோடும் புத்துணர்ச்சியோடும் கலந்து கொண்டனர். அவ்விழாவில் இறுதியாக அறிஞர் அண்ணா அவர்கள் நகைச்சுவை பொங்க ஒரு மணிக்கும்மேல் உரையாற்றினார். "எழுத்தாளன் ஆவது எப்படி என்றால், 'ஏன் எழுத்தாளனாக வேண்டும்?' என்ற வினாவை எழுப்பவேண்டும். எழுதாமல் தீராது என்னும் எழுச்சி உந்த எழுதுவதே எழுத்து; அத்தகைய எழுத்தை எழுதுபவனே எழுத்தாளன் ஆவான்." எனக் கூறியவர் மேலும், "ஏற்கப்பட்ட எழுத்தாளர்—ஏற்கப்படாத எழுத்தாளர்" என்றும் உள்ள "எழுத்தாளர் வகைகளை" அருமையாக விளக்கினார். இந்த உரையில்தான் அண்ணா அவர்கள் நம்நாட்டு அரசுகள் (நடுவணரசும், மாநில அரசுகளும்) எழுத்தாளர்களை நாடுமுழுதும் சுற்றுலா சென்றுவர உதவவேண்டும். அதனால் இலக்கிய எழுச்சி தோன்றும் என்னும் அருமையான நற்கருத்தை வலியுறுத்தினார். இந்த அறிவுரையை இதுவரை நடுவணரசோ, பிற அரசுகளோ ஏற்று நடக்காத நிலை இன்னும் இருக்கிறது!

"உள்ளத்தில் நிற்கவேண்டிய சிறந்த படைப்புகளை உருவாக்க வேண்டுமென்ற இலட்சியத்துக்காகவே ஒருவர் எழுதவேண்டும். அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுத்தோவியங்களைப் படைக்க வேண்டும். குறித்த ஒரு துறையில் ஆழ்ந்து ஈடுபட்டு எழுதவேண்டும்." என அறிவுறுத்தினார்.

மேனாட்டு எழுத்தாளர் ஒருவர் தேம்சு ஆறு தொடங்குமிடம் தொட்டுக் கடலில் கலக்குமிடம் மட்டும் ஆற்றின் போக்கையொட்டிப் பயணம் செய்து ஆய்வு நிகழ்த்தி அவ்வவ்விடங்களின் வரலாற்றை—அமைப்பை எழுதியிருப்பதையும், இலண்டன் மாநகர் காலந்தோறும் வரலாற்றில் அமைந்திருந்ததை எழுதிய நூல்பற்றியும் குறிப்பிட்டு அதேபோலப் பாலாறு, காஞ்சி முதலியவை பற்றி எழுத்தாளர் எழுதவேண்டும் என்றார்.

செங்கைமாவட்ட எழுத்தாளர் கழக ஆண்டு விழா 14—4—1962 சனிக்கிழமையன்று பல்லவபுரத்தில் நிகழ்ந்தது. இவ்விழாவில் திரு. மா. கி. தசரதன், திரு. நாரண-துரைக்கண்ணன், திரு. குன்றக்குடிகளார், திரு. கலைஞர். மு. கருணாநிதி, திரு. காஞ்சி கல்யாணசுந்தரம், திரு. மேயர் குசேலர், திரு. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், திரு. இரா. நெடுஞ்செழியன், போன்றோர் உரையாற்றினர். மிகச் சீரிய முறையில் நிகழ்ந்த விழாவாகும் இது. இறுதியாக நிறைவுப் பேருரையாற்றினார் பேரறிஞர் அண்ணா அவர்கள். எனது நாட்குறிப்பில் அனைவருடைய பேச்சையும் அப்படியே பதிவு செய்திருந்தேன். பேரறிஞர் அண்ணா இரவு 8-45 மணிக்குத் தம் பேருரையைத் தொடங்கினார். அருமையான இலக்கிய விருந்து அப்பேச்சு. அதில் இன்றியமையாத சில கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"கெழுதகை நண்பர் நாரண-துரைக்கண்ணன் அவர்கட்கும், திருவாளர். கா. சீ. சீ. அவர்களுக்கும் பாராட்டு வழங்குவதால் நான் மிகுந்த உவகையடைகிறேன். திரு. கா. சீ. சீ. காஞ்சியைச் சேர்ந்தவர் என்பதால் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன். படிப்பதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் நம் மக்கள். பெற்றதைப் பயன்படுத்திக் கொள்வதில் நாம் பின் தங்கியிருக்கிறோம். இதுவே நம்முடைய மிகப் பெருங்குறை."

"மக்கள் வறுமையில் வாடக்கூடாது. மக்களை வழிநடத்தும் எழுத்தாளர்களும் வறுமையில் வாடக்கூடாது. எழுத்தாளர் வாழ்வு சிறப்புடைய நிலையில் இருந்தால்தான் நல்லபடைப்பு கிட்டும். எழுத்தாளர்க்கு நல்ல நூல்களை வாங்கிப் பரிசளிக்கும் பழக்கம் நம்நாட்டில் உண்டாக வேண்டும். எழுத்தாளரை ஊக்குவிக்க வேண்டும்."

"எழுத, எண்ண, பேச முழு உரிமையை அரசு தரவேண்டும், கருத்துக்குத் தடை கூடாது. அமெரிக்காவில் டார்வின் கொள்கையைப் பள்ளியில் கற்பித்த ஆசிரியனுக்கு அறமன்றம் தண்டனையளித்தது. அதற்காகப் பெரிய வழக்கே நடந்தது. எனவே தனிச் சட்டம் கொண்டு வந்து அவ்வாறு கற்பிப்பதை அரசு தடுத்தது. ஆனால் அறிஞர்கள் கிளர்ந்தெழுந்து சட்டத்தை எதிர்த்தனர். சட்டம் செயல்படவில்லை. அதுபோன்றே நாமும் நம்முரிமையைக் காத்துக்கொள்ள வேண்டும்."

"எழுத்தாளர்கள் உரிமையை இழக்காமல் உரிமையைத் தெரிவிக்க வேண்டும்."

"மக்கள் மனத்தில் எழும் சிக்கல்களுக்கு ஊசலாடும் கேள்விகளுக்குத் தக்க விளக்கம் அளித்து, ஏடுகள் எழுதப்பட வேண்டும். அதற்கான ஆற்றல் தமிழ் எழுத்தாளர்களிடம் நிரம்ப உண்டு. ஆனால், முடிவதில்லை. காரணம் தடைகள்! அவை இரண்டு வகைப்படும். ஒன்று ஆட்சியாளர்களால் விதிக்கப்படும் தடைகள். மற்றொன்று எழுத்தாளர்கள் தாங்களே தங்களுக்கு விதித்துக்கொள்ளும் தடைகள், சாண்முகத் தமிழ் தனித்து இயங்கத் தக்கது

என்று ஏடு எழுத வேண்டுமென்று ஓர் எழுத்தாளருடைய உள்ளுணர்வு கூறுமானால், வர இருக்கும் சட்டத்தில் அவருக்கு அந்த உரிமை மறுக்கப்படும்.

பிரிவினைப் பிரசாரத்தடை என்பதெல்லாம் உங்கள் (தி. மு. க.) பிரச்சினைதானே என்று வாளா இருந்தால் இது எந்த அளவுக்குப் போகுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்குப் பத்தாண்டுகளுக்குப் பிறகு இன்று இங்குப் பேசப்பட்டது போலத் தமிழகத்தின் தனிச் சிறப்பைப் பேசுவதும் மொழிவெறியைக் கிளப்பக் கூடியதே. ஆகையினால் தமிழ்நாட்டைத் தனித்துப்புகழாதே என்பதாகக் கூறப்பட்டுத் தடைசெய்யப்படும். இந்த நிலை ஏற்படும் அந்நாளில் எதிர்த்துக் கேட்பவர் யார்? எழுதுவதற்கும் எண்ணுவதற்கும் பேசுவதற்குமுள்ள முழு அடிப்படை உரிமைகளை நமக்களிக்க நீங்கள் வலியுறுத்த வேண்டும். அதற்காக இன்றே போராட்டத்தில் குதிக்க நான் அழைக்கவில்லை. எழுத்தாளர்கள் தங்கள் உள்ளுணர்வு கலந்த எதிர்ப்பினை வெளிப்படுத்தியாக வேண்டும் என்றுதான் நான் வேண்டுகிறேன். அரசினர் 'தமிழ் பாடமொழியாக இருக்கத் தகுதியானதுதானா?' என்ற ஐயப்பாட்டை எழுப்புகிறார்கள். இதைக் கண்டிக்கும் வகையில் 'இந்த அமைச்சர்கள் (அப்போது இருந்தவர்கள்!) தமிழ்ப்பற்றுடையவர்கள்தாமா?' என்று எழுத வேண்டுமென்றால், தமிழ் எழுத்தாளர்களில் நூற்றுக்கு அறுபதுபேர் 'நமக்கேன் இந்தப் பொல்லாப்பு?' என்று வாளா இருந்து விடுவார்கள். இந்த மனநிலை மாறவேண்டும்.

தமிழ்மொழியின் தனிச் சிறப்பையெல்லாம் கூறுகின்ற எழுத்தாளர்கள், அதற்குரிய—அது பெறத்தக்க—இடத்தைப் இங்குப் பெற்றுத்தந்து விட்டோமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்."

கருத்துகளை வெளியிடும்போது பிறர் மனத்தைப் புண்படுத்தாத வகையில் எழுத வேண்டுமென்று அறிவுரை தரப்படுகிறது. அதே சமயத்தில், எதை—எப்படி—எழுதினால் எவரெவர் மனம் புண்படுமோ என்றெண்ணி எழுத்தாளர்கள் தங்கள் மனத்தைப் புண்படுத்திக் கொள்ளாமல் இருப்பதும் மிக இன்றியமையாததாகும். கருத்துகளை வெளியிடுவதில் நமக்குத் தயக்கம் இருக்கக்கூடாது. புண்படுத்தாமல் எழுதவேண்டும் என்கிறார்களே! புண்படுத்துவதற்காகவே யாரும் எழுதுவதில்லையே! மனத்தைப் புண்படுத்திக் கொள்ளாத தன்மை நமக்கு வேண்டும். நல்ல பண்டம் கூடக் காலத்தால் கெடுவதைப் போல, நல்ல எண்ணம் கூடக் காலத்தால் கெடலாம். பிறர் மனம் புண்படும் என்று அஞ்சாமல் எழுதவேண்டும். இப்படி அஞ்சினால் எழுதவே முடியாது.

என்னைத் திட்டி எழுதப்படுகிற ஏடுகளையெல்லாம் நான் தொடர்ந்து படிப்பதில்லையென்றாலும், மொத்தமாக எடுத்துவைத்து ஒருநாள் முழுதும் படிப்பேன் அப்படிப் படிப்பதால் தமிழ்நாட்டில் எவ்வளவுக்கு அநாகரிகம் இன்றும் உள்ளது என்பதை அறிவதோடு, நாம் இவ்வளவு எடுத்துச் சொல்லியும், நம் கருத்துகளை ஏற்காதவர்கள்—மாறுபாடுடையவர்கள்—இன்றும் இவ்வளவு பேர் இருக்கிறார்களே! என்று எண்ணி, நானே வெட்கப்படுவதுண்டு. நாம் செய்யவேண்டிய வேலை இன்னும் இவ்வளவு இருக்கிறதே என்பதை அறியவும் முடிகிறது."

★ "திருக்குறளுக்கு ஏனோ திடீரெனக் கடந்த ஐந்தாண்டுக் காலமாக நல்ல ஆதரவு இல்லையென நான் உணர்கிறேன். தமிழின் அரிய திருக்குறளைப் பரப்ப நாம் மீண்டும் ஆர்வமாகத் தொண்டு செய்ய வேண்டும்."

"எழுத்தாளர்களுக்கு அஞ்சாநெஞ்சம் வேண்டும். சுவைபட யார் எழுதினாலும் பாராட்டும் பண்பு வேண்டும்."

"எழுத்தாளர் செம்மையுற, அவர்கள் வாழ்வு வளமுடையதாக வேண்டும். வறுமையில்தான் செம்மை தோன்றும் என்பது பேச்சுக்கு வேண்டுமானால் கூறப்படலாம். ஏடுகள் படிப்பவர்கள் அவற்றைத் தாங்களே விலைகொடுத்து வாங்கிப் படிக்கும் பழக்கத்தை நிரம்ப ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எழுத்துக் கலையில் தேறியவர்கள் வாழ்க்கைக் கலையில் தோற்கத் தேவையில்லை என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்." அறிஞர் அண்ணா அவர்கள் நிகழ்த்திய பேருரையின் சில பகுதியைதான் இதுவரையில் மேலே குறிப்பிட்டேன்.

எழுத்தாளர் முன்னேற்றத்திலும்; எழுத்துறையின் ஆக்கத்திலும் அண்ணாவின் ஆர்வம் அளவிட முடியாதது. அவர் ஆர்வம்காட்டி உருவாக்கிய எழுத்தாளர் கழகம் இன்று இருக்குமிடம் புலப்படவில்லை. மீண்டும் எழுத்தாளர் நண்பர்கள் செங்கை எழுத்தாளர் கழகத்தை அண்ணாவின் ஆணைப்படி உருவாக்கி வளர்க்க வேண்டும்.

மூன்றாம் எழுத்தாளர் மாநாடு (மதுராந்தகத்தில் நிகழ்ந்தது) பற்றியும், எழுத்துலகில் அண்ணாவின் பணி—படைப்பு—இடம் பற்றியும் பிறகு ஒரு கட்டுரையில் காண்போம்.

அண்ணாவின் எழுத்தாக்கம், இலக்கியத்திறன், அரசியல் எழுத்து, உரைத்திறன் ஆகியவை தனித் தனியே மதிப்பீடு செய்வதற்குரியனவாகும். ஃ

---

★ பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆய்வுத் துறையை அண்ணா அவர்கள் ஆக்கியமைத்ததன் அடிப்படை இதுவே என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பேச்சு நிகழ்த்தும் போது அண்ணாவும் தி. மு. க. வும் எதிரணியில் இருந்தனர். அண்ணா ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர் 'திருக்குறள் துறையை' உருவாக்கியமைத்தனர். சொன்னதைச் செய்வதில் அண்ணா காட்டிய ஆர்வம் நம்மனையோருக்கு அரிய எடுத்துக் காட்டாகும்.

# அண்ணா பற்றிய சில நினைவுகள்

எல்லோருக்கும் பொதுவான ஒரு இயற்கை உணர்வு, அதாவது நம் உள்ளத்தை எல்லாம் கடந்து நிற்கும் ஒரு மெய்ப் பொருள் சிறந்த பேரறிவு உண்டென்ற உண்மையினை மக்களாய் பிறந்த அனைவரும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையால்"

என்ற பொதுமறையாம் திருக்குறளில் கூறியுள்ளபடி உணர்ந்து கொள்ளும் ஒரு சிறந்த வாய்ப்பினை உண்டாக்கித் தந்த பெருமை பெருந்தகை அண்ணா அவர்களுக்கே உரியதாகும்.

அவர்தான் தம்முடைய பேச்சாலும் எழுத்தாலும் அந்தப் பேருண்மையினை நாம் அனைவரும் உணரும்படி செய்தவராவர்.

எந்தப் பொருள்பற்றி எழுதினாலும் எதைப் பற்றிப் பேசினாலும், அங்கெல்லாம், மக்கள் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற இன்றியமையாமையை அடுத்துக் கூறுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

மக்கள் மறைந்திருந்த ஒன்றை—மறக்கும்படி செய்யப்பட்டு இருந்த ஒன்றை மறையும்படியான நிலைமை உண்டாக்கப்பட்டு இருந்த ஒன்றை, மக்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பினை உண்டாக்குவதில், அண்ணா, அவர்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியும், தளராத உழைப்பும் எத்தகைய தென்பதை, அவரோடு முப்பதாண்டுகளுக்குமேலாக நெருங்கிப்பழகிய எனக்கே, மற்றவர்களைவிட நன்கு தெரியும்—புரியும்.

பெரியார் இராமசாமி அவர்கள், கம்பராமாயணம் பெரியபுராணம் ஆகியவைகளை எரிக்க வேண்டும் என்று கூறிய காலத்திலும், பிள்ளையார் சிலையை உடைக்க வேண்டுமென்று குரல் எழுப்பிய சமயத்திலும், நமது அண்ணா அவர்கள் பெரியார் அவர்களால்தோற்றுவிக்கப் பட்ட தன்மான இயக்கியத்தின் தளபதியாக இருந்து கொண்டே, இந்த உண்மையினை மக்களிடையே எடுத்துக்கூறி வந்தார்.

அந்தப் புனைந்துரைப் புராண—இதிகாசங்கள் எரித்தொழிக்கப்பட வேண்டிய இன்றியமையாமையை எடுத்துக் கூறியதோடு, அமைதி பெற்றுவிடாமல் அப்படிச் செய்வதில் தவறேதும் இல்லை என்று விளக்க, கம்பரசம், தீ பரவட்டும், நீதி தேவன் மயக்கம் போன்ற ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டும், பெரியாரின் கொள்கைக்கு ஆதரவாக இருந்து வந்தார்.

பிள்ளையார் சிலையை உடைக்க வேண்டுமென்று பெரியார் கூறியபோது அண்ணா அவர்கள்,

'நான் பிள்ளையார் சிலையை உடைக்கவும் மாட்டேன்,'

பிள்ளையாருக்குக் தேங்காய் உடைக்கவும் மாட்டேன்!! என்று மேடைகளில் பேசியும், ஏட்டில் (திராவிட நாடு இதழில்) எழுதியும் வெளிப்படையாகத் தமது கருத்தை, மக்கள் மனம் புண்படாத முறையில் எடுத்து விளக்கினார்.

மூடப்பழக்க வழக்கங்களுக்கு வித்தூன்றும் எதிலும் தமது கருத்தைச் செலுத்தாமல் மக்களுக்கு உண்மை நெறியை உணர்த்துவதில் தமது பேரறிவையும் உழைப்பையும் பயன்படுத்தி வந்தார்.

கம்பரின் இராமாயணத்திலும் சேக்கிழாரின் பெரிய புராணத்திலும் கவிநயம் இருப்பதை ஒப்புக்கொண்ட அண்ணா, அவற்றுனுள்ளே மலிந்து காணப்படும் கருத்து நயமின்மையை எடுத்துக் காட்டி அந்த நூல்களை படிப்பதில் மக்களுக்கு எந்தவிதமான அறிவு வளர்ச்சியோ முன்னேற்றமோ ஏற்படாது என்பதைத் தக்க சான்றுகளுடன் விளக்கினார்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர், என்ற நற்பண் பாட்டுக்கு அந்த நூல்கள் வழிகாட்டுவனவாக அமையவில்லை என்பதை நிலைநாட்ட அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலப்பல.

ஒருசமயம், தமிழகத் தலைநகரில் (சென்னை) நடைபெற்ற கம்பராமாயண பெரியபுராணச் சொற்போரில் கலந்துகொண்ட அண்ணா அவர்கள், அந்நூல்களின் கருத்தை வெட்டிப் பேசுபவராகவும், பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் அந்நூல்களை முழுக்க முழுக்க ஒட்டிப் பேசுபவராகவும் தத்தம் கருத்தினை வெளியிடும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர்.

முதலில் அந்நூல்களை ஒட்டிப் பேசிய சேதுப்பிள்ளை அவர்களின் கருத்துகளை, இரண்டாவதாகப் பேசிய அண்ணா அவர்கள் தக்க சான்றுகள் காட்டி வெட்டிப் பேசியதை செவிமடுத்துச் கொண்டிருந்த சேதுப்பிள்ளை அவர்கள் கடைசிவரை இருந்து அண்ணா அவர்களின் விளக்கங்களுக்கு விடை கூறாமலேயே இடையில் எழுந்து, எனக்குச் சிறிது வயிற்றைவலிக்கிறது!! என்று கூறிச்சென்று விட்டார்கள்.

இன்னொரு சமயம், இதே போன்ற ஒரு சொற்போர் நிகழ்ச்சி சேலத்தில் நடைபெற்றது அதில் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களும், அண்ணா அவர்களும் கலந்துகொண்டு, முறையே அந்நூல்களின் கருத்துக்களை ஒட்டியும் வெட்டியும் பேசினார்கள்.

முதலில் அந்நூல்களை ஒட்டிப்பேசிய நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் ஆற்றிய உரையை அடுத்து, அந்நூல்களின் கருத்துக்களை வெட்டிப்பேசிய அண்ணா அவர்கள் கூறிய விளக்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்த நாவலர் பாரதியார் அவர்கள் பேச்சின் நடுவே எழுந்து,

"எனக்குப் புகை வண்டிக்கு நேரமாகிறது" என்று கூறிச் சென்று விட்டார்கள்.

இப்படி அந்த இரு பெருந்தமிழறிஞர்களும், சொற்போர் நடந்து கொண்டிருக்கும் போதே திடீரென்று எழுந்து போய்விட்டதால், அவர்கள் ஓரளவு கண்ணியத்தையும் கடமையுணர்ச்சியையும் மறந்து விட்டார்கள் என்பதைத் தவிர, அவர்களிடம் திறமை இல்லையென்று கூறிவிட முடியாது.

அண்ணா அவர்களைவிட முறையாகத் தமிழ் பயின்றவர்கள்—இலக்கிய இலக்கண வரம்பு கண்டவர்கள் ஆத்திசூடியிலிருந்து தொல்காப்பியம் வரை எழுத்தெண்ணிக் கற்றுப் புலமை பெற்றவர்கள் பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்களாய் இருந்தவர்கள்.

இப்படிப்பட்ட பேரறிவாளர்களான இரு பெரும் புலவர்களும், அண்ணா அவர்களின் உரை முடியும்வரையில் அவையில் அமர்ந்து இருந்து, தங்கள் முடிவான கருத்தைத் தெரிவிக்காமல், நிகழ்ச்சியின் நடுவிலேயே,

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம் பார்க்க)

ஈழத்து அடிகள்

# நினைவுப் பந்தல்

## இதய ஒலியென எண்ணினையோ?

(தவமுத்து. அண்ணாமலை, பி. ஏ., பி. டி.,)

வங்கக் கடலலை வாழ்த்துரையில்—தமிழ்
வள்ளலும் நீள்துயில் ஆற்றுகிறார்!
எங்களின் அண்ணாய் வாழ்ந்துறைந்தே—எங்கள்
இதயத் தெய்வமாய் வாழுகின்றார்!
கேட்போர் பிணித்திட பேசிடுவார்—தமிழ்
கீதமோ? என்றவர் கேட்டிருப்பர்.
வேட்புற பேசிய வேந்தரவர்!—நம்
வேதனை நீக்கிய ஏந்தலவர்!
கடமையைக் கண்ணெனக் கொண்டுறைந்தார்-அவர்
கண்ணியம் போர்முறை என்றுரைத்தார்.
உடமையாய் கட்டுப் பாட்டினையே—கட்சி
உயர்ந்திடும் வழியெனக் கண்டுரைத்தார்.
தமிழ்த்தாய் போற்றிய தலைமகனே!—எம்
தாழ்வினை நீக்கிய கலைமகனே!
இமிழ்கடல் ஓசையில் ஏனயர்ந்தாய்?—எங்கள்
இதய ஒலியென எண்ணினையோ?

★

## இறைவனவன்...!

(கவிஞர் இரா. கண்ணிமை)

பேரறிஞன் நம்அருமை அண்ணன்
பேரொளியே! அம்மேதை இங்கே
பிறந்தார்! வாழ்வில் சிறந்தார்!
கடமை தூய கண்ணியத் தோடு
கட்டுப்பாடு வைத்தான்—இங்கு
தடமே புரண் தமிழர்க் கவனே
தாயாகி அணைத்தான்!
உலகம் வியக்க உயர்தொண் டாற்றிய
உத்தமத் தலைவனவன்—நாளும்
கலகம் இல்லா காட்சியைக் கண்ட
கவிஞனுறு இறைவனவன்!

★

## காஞ்சியின் செல்வர்!

(சண்முக. தாயுமானவன், பொன்மலை)

முத்தமிழர் நெஞ்சினில் மூண்டெழும் எழுச்சியை
முறையோடு தூண்டி விட்டு
இத்தரை எங்கணும் இளையவர் நெஞ்சினை
இயற்கையாய் கவர்ந்தி ழுத்து
சித்தத்தில் இனப்பற்றும் சீர்திருத்த நோக்கமும்
செழித்திடப் பாடு பட்ட
உத்தமர் அண்ணாவின் உன்னதத் தொண்டினை
உரைத்திட நாவி னிக்கும்!
தீச்சுடர் ஒத்திடும் திறமான சிந்தையால்
தீந்தமிழ் காத்த அண்ணா!
ஏச்சுக்கும் பேச்சுக்கும் இழிந்தவர் போக்குக்கும்
இதயமே கலங்கி டாமல்
மூச்சுள்ள வரைக்குமே முத்தமிழர் நலமுற
முயன்றுமே உழைத்து ழைத்தக்
காட்சிக்கு எளியராம் கடுஞ்சொல் லறியாத
காஞ்சியின் செல்வர் வாழ்க!

## "தத்துவப் புத்தன்"

(கவிஞர் எம். சுல்தான்)

நத்தையில் முத்து நீயே!
நற்தொண்டு வேந்தன் நீயே!
எத்தரின் பொய்யினை புதைத்த
எங்கள் வாழ்வின் ஒளியே!
நித்திரை யின்றி மக்கள்
நன்மையில் திளைத்த மேதை!
பத்தரை மாற்றுப் பொன்னே'
தத்துவப் புத்தனே "அண்ணா!"

★

## ஏக்கமே!

(கவிஞர். "சோழபாண்டியன்")

தமிழுக்குப் புகழ்சேர்த்த தலைமகனே
தார்வேந்தர் புகழ்கொண்ட பெருமகனே
அகிலத்தை ஈர்த்திட்ட அருமகனே
அலைகடல் ஓரத்தில் உறங்குவதேன்
உறவுக்கு ஓர்அண்ணன் உழைப்புமன்னன்
இறவாத புகழுற்ற எங்களண்ணன்
மறவாத பேரன்பு தங்குமுள்ளம்
துறவாத பேருறவு தூங்குவதேன்
தாங்காது தமிழுள்ளம் தவிக்கின்றது
நீங்காத துயரத்தைக் குவிக்கின்றது
பாங்கான பெருவுள்ளம் புவிக்குஎன்று
ஏங்காத மனமேது ஏக்கமேதான்

★

## "தலைவராம் அண்ணா"

(கவிஞர். வி.சி. நடவரசன்)

காஞ்சியிலே தான்பிறந்து
கன்னித் தமிழறிந்து
வாஞ்சையிலே ஆங்கிலமும்
வழுவின்றி தானறிந்தார்!
கெஞ்சாமை வேண்டுமென
கடமை உணர்வூட்டி
அஞ்சாமை கண்ணியம்
ஆகுமென்றார் அண்ணா!
கட்டுப்பாடு கொண்டு
கருத்துடனே வாழும்,
திட்டம் கூறிட்ட
தலைவராம் அண்ணா!

★

## "அண்ணா"

(கவிஞர். இரணியன்)

அறியாமை இருள்தன்னில் அமிழ்ந்திருந் தோர்தமை
அறிவினால் மீட்டுவந்தோன்;
அழகான சொல்வன்மை மூலமாய்த் தமிழர்தம்
ஆழ்நெஞ்சை ஆட்கொண்டவன்;
உறுவொண்மை கொண்டவன்; உயர்நடை கண்ட
ஒண்டமிழ் மொழிமேன்மையை [வன்;
உலகினுக் குணர்வித்த ஒள்ளியன் அண்ணனின்
உலைவிலாப் புகழ்வாழ்கவே!

## அண்ணா மீண்டும் பிறப்பாயே?

(த. க. கௌரிசங்கரன்)

நும்பிரிவால் தம்பியரின் விழியில் ஈரம்!
நும்புகழோ ஒளிமுன்னர் மங்கா வைரம்!
நும்பிரிவால் தமிழ்த்தாய்க்கே துன்பம்! துன்பம்!
நும்பேச்சு தருவதெல்லாம் இனிமை! இன்பம்!
நும்மெண்ணம் தனையிங்கே எவரும் காணார்!
நும்கொள்கை ஏற்காதார் உயர்வைப் பேணார்!
நும்மைப்போல் இனியொருவன் பிறப்பா
னில்லை!
நும்புகழுக்கு இமயமும் இணையா யில்லை!

அரிமாவின் வீரத்தை நடையில் காட்டி;
அருநெஞ்சில் வேழத்தின் வலிவைத் தேக்கி;
விரிந்தவான் கொள்கையினால் மடமை நீக்கி;
பரிவோடு தமிழ்காத்த அண்ணா வாழ்க!
புரிந்துள்ள செயலாலே இன்னல் போக்கி
புத்தொளியால் உள்ளத்தின் இருளைத் தாக்கி
புதுஅரசு கண்டிட்ட பெருந்தகையே!
பண்பாளா!
அண்ணாவே! நீமீண்டும் பிறப்ப தென்னாள்?

★

## வழி தவறிப் போனது ஏன்?

(கவிஞர். இலக்கியன்)

சோகக் குரலெடுத்து சூழ்ந்தழவோ வைத்திட்டீர்!
சொல்லின் முதற்படியே! செந்தமிழர்க்
கோன்நீயே!
ஏகப் புகழ்சேர்த்து ஏனய்யா வான்நோக்கி
ஏக நினைத்திட்டீர்! எமனுறவை அணைத்திட்டீர்!
போக விளைச்சலென புதுநெல்லாய் நின்கருத்துப்
பேழைப் பரிசளித்து பிரிவதற்கோ இவ்வாழ்வு?
காகக் குழுகூட கதறியழ அண்ணா உன்
கனிவைப் படைத்திட்டீர்! கனியானீர்
காலன்முன்!
சங்கத் தமிழ்காத்த சான்றோர்க்கு சிலைவைத்து
சாவைச் சந்தித்த சான்றோனே! அண்ணாநீர்
வங்கக் கடலருகே வாழ்வதனால் அக்கடல்நீர்
தங்கத் தமிழ்நாட்டை அடையாது! நாடழியா!
அழிவைத் தடுக்கத்தான் அங்குதுயில் கொண்டீரோ?
அலையின் தாலாட்டில் அயரஇடம் கண்டீரோ?
வழிகள் பலசொல்லி வார்த்தைகளில் சுவையள்ளி
வாழ்வைக் கண்டவரின் வழி தவறிப்
போனதுஏன்?

## நமதண்ணா

(ரா. சுப்பராயலு பி. ஏ.)

அன்பின் வடிவம் நமதண்ணா
அறிவின் சிகரம் நமதண்ணா
இன்சொற் பழனம் நமதண்ணா
ஏணியின் இதயம் நமதண்ணா!
புதுமை உலகம் நமதண்ணா
பொறுமைத் திலகம் நமதண்ணா
மதுரப் புதினம் நமதண்ணா
மாலை மதியம் நமதண்ணா!
சிந்தனைத் தங்கம் நமதண்ணா
தென்கடல் தரளம் நமதண்ணா
சுந்தனம்; பவளம் நமதண்ணா
சங்கொடு; வயிரம் நமதண்ணா!

## தங்கமேநீ துயில்கிறாயோ?

(உமாபதி)

தேக்கம் கொண்ட
தமிழக வாழ்வில்
ஆக்கம் காண
அல்லும் பகலும்
ஊக்கம் கொண்டு
உழைத்த அண்ணா
தூக்கம் கொண்டு
துயில் கிறாயோ?

செல்வமென்று பண்புகளை
சேர்த்து வாழ்ந்து
கொள்கைக்காய் உழைத்து
குற்றம் தவிர்த்து
பல்வகை கலைகளை
பாசமுடன் ஆதரித்து
வெல்லுபுகழ் கொண்டண்ணா
வீழ்ந்தின்று துயில்கிறாயோ?

மானுலாவி விளையாடும்
மயக்குந் தரும்
தேனளாவும் மலர்ச்சோலை
தென்றலென சொற்களும்
வானளாவும் கோபுரமாய்
வளர்ந்திட்ட புகழும்
தானளாவி வாழ்ந்திட்ட
தங்கமேநீ துயில்கிறாயோ?

★

## தென்றலில் வா!

(புலவர் மருத பொன்னுசாமி)

அண்ணனின் இதயம் கோயில்;
ஆண்டவன் தங்கு மில்லம்;
வண்டமிழ் வாழும்; அண்ணா
வாயினில் ஊறும் பேச்சில்
கண்டவர் போற்றும் உள்ளம்
கண்ணியத் தோற்ற மன்றோ!
அண்ணனின் தேனின் பேச்சில்
அடிமைதான் மக்க ளெல்லாம்!

சிரிக்கிறாய் அண்ணா நீயும்!
சிந்தனை இழந்த தாலே
எரியுதே எங்கள் உள்ளம்
எப்போ துன்னைப் பார்ப்போம்!
பரிசென அளிக்கும்; அந்த
பைந்தமிழ் கேட்ப தெப்போ?
தெரியா மல்நீ இந்த
தென்றலில் வாயேன் அண்ணா!

★

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

★ சூர்தாக்கள்
★ பெல் பாட்டம்கள்
★ லுங்கிகள்
★ சேலைகள்
★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை-8.

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் பெருந்தன்மையை மறந்து எழுந்து போனார்கள் என்றால் அதற்கு அவர்களால் கூறப்பட்ட "வயிற்றுவலியும், புகை வண்டிக்கு நேரமாகி விட்டது." என்ற கூற்றும் உண்மையான காரணங்கள் தான் என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் விரும்பினால் அல்லது எதிர்பார்த்தால், அதன் பின்னர், அவர்களே தங்களுக்கு வசதியான வாய்ப்பான ஒருநாளைக் குறிப்பிட்டு, அச்சொற்போர் நிகழ்ச்சிகளுக்கு ஒரு நல்ல முடிவைக் கண்டிருத்தல் வேண்டும். இதனை அவர்கள் செய்தார்களில்லை.

அண்ணா அவர்களோடு சொற்போர் நிகழ்த்தி வெற்றிகாண முடியாது என்பதனையே அவர்களுடைய இடைவெளி நடப்பு எடுத்துக் காட்டுவதாக அமைந்து விட்டது.

இதனால், அண்ணா அவர்கள் அவ்விருவரையும் விடத் தமிழ்ப் புலமை பெற்றிருந்தார் என்று எண்ணிப் பெருமைப்படுவதாக எவரும் தவறான முடிவுக்கு வந்து விட வேண்டாம்.

அவர்கள் தாங்கள் கற்றதை அப்படியே நம்பினார்கள் தாங்கள் கற்றவைகளை ஆராய மறுத்தார்கள் அல்லது மறந்தார்கள்.

அவர்கள் கம்பரைக் கடிந்துரைக்கவோ சேக்கிழாரைச் சினந்து பேசவோ துணியவில்லை.

கம்பராமாயணத்தை அப்படியே நம்பினார்கள் பெரிய புராணத்தில் பிழை ஏதும் இல்லை என்றார்கள்.

ஆனால், அண்ணா கம்பராமாயணத்தை ஐயந்திரிபற ஆராய்ந்தார்கள். தம்முடைய ஆராய்ச்சி முடிவுகளை நூல் வடிவிலும் கொண்டு வந்தார்கள்.

அப்படியே பெரியபுராணத்தையும் ஆராய்ந்து பார்த்தார். இயற்பகையும் கோட்புலியும், செருத்துணையும் போன்ற, நாயன்மார்களின் முறைதவறிய கொடுமைகளை மக்கள் முன்னே எடுத்துக்காட்டித், தமிழ்மக்களின் பண்பாட்டிற்கு இவை எல்லாம் மாறுபட்டவை அல்லவா என்று கேட்டார்.

மறுத்துரைக்க வகையின்றி அப்புலவர் பெருமக்கள் இருவரும் ஊமைகளாயினர்.

புராண இதிகாசங்களை ஆராய்வதே பெருங்குற்றம் பாவம் என்று அடித்துக் கூறியதோடு அவர்கள் அமைதி பெற்றனர்.

ஆனால், அண்ணா அவர்கள் கற்பவற்றை மட்டுமே கற்க வேண்டும் அதுவும் கசடறக் கற்க வேண்டும் என்பதில் தம்முடைய கருத்தைச் செலுத்திக் கம்பரையும், சேக்கிழாரையும் நன்கு ஆராய்ந்து, அவை இரண்டும் தமிழ் மக்களின் பண்பாட்டிற்குப் பொருந்தி வராத நூல்கள் என்று புறக்கணித்தார்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழர் கொள்கைக்குப் புராண இதிகாசங்கள் மாறுபட்டவை என்பவை எடுத்துக்காட்ட ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு என்பது போல், இதிகாசங்களில் இராமாயணத்தையும், புராணங்களில் பெரியபுராணத்தையும் மேற்கோளாக எடுத்துக்காட்டினார்.

மக்களின் ஒருமைப்பாட்டுணர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும் எதனையும் அவை எத்துணைப் பெரிய நூல்களாயினும் எத்தனைப் பெரிய புலவர்களால் ஆக்கப்பட்டவையாயினும் அவற்றையெல்லாம் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக்கூடாதென்பதனை அண்ணா அவர்கள் அறுதியிட்டுக் கூறிவந்தார்.

# உத்தரவாதமில்லாதவள்

— கஸ்தூரி நடராசன்

நீண்ட நெடும் இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன்.

எல்லாமே கனவுக் காட்சிகளாக ஒன்றன்பின் ஒன்றாக என் மனக் கண்களில் நிழலாடுகின்றன. தளர்ந்துபோயிருந்த நெஞ்சம் இப்போதுதான் தன் நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது. உயரற்ற நிலையில் இருந்து உணர்வுக்கு மீண்டுகொண்டிருக்கின்றது. நிறைவை நோக்கி என் எண்ணங்கள் பறக்க முடியாவிட்டாலும், நடைபோட முற்பட்டு விட்டது—தவிப்பில் சிக்கிச் சீரழிந்து போயிருந்த மனம், தன்னிலைக்கு வந்தவண்ணம் இருக்கின்றது—

குயில் கூவுகிறது என்பார்கள். அது ஒருபோதும் கூவல் இல்லை, என் ஆவல் தீர்த்திடும் என தன்புக்கரசி அமுதாவின் பெயரையே பாடிக்கொண்டிருக்கிறது என்பேன் அப்போது. "பைத்தியக்காரன்" இவன் என்ற பெயரை மற்றவர்கள் எனக்கு சூட்டியிருப்பார்களோ என்னவோ அது எனக்குத் தெரியாது.

அதே குயில் அந்த பழைய பாணியிலேதான் கூவுகிறது இப்போதும். குரலைத் தெளிவாகக் கேட்க முடிகிறது; ஆனால் அந்தக் குரலில் இப்போது அமுதாவின் பெயர் இல்லை. குரல் குயிலுக்குச் சொந்தமானது. அதற்கு அமுதாவின் பெயர் அன்றும் தெரியாது. இன்றும் தெரியாது. என் மனம் கற்பித்துக்கொண்ட 'மடமையை' என்னால் இப்போதுதான் பகுத்துணர முடிகிறது. பகுத்தறியக் கூடிய பக்குவ நிலையை என் மனம் பெற்றிட நான் விலையாகத் தந்த வேதனை, விரசம், எவ்வளவு? இப்போதாவது என் மனம் இந்த நிலைக்கு வர ஒத்துக் கொண்டதே —அதற்கு ஆண்டவனுக்கு என் உளங்கனிந்த கைகூப்பு. விடைபெற்றுச் சென்றவண்ணம்இருந்த போராட்ட நினைவுகளுக்கும், புகைச்சல்களுக்கும், என் இதயம் நன்றியுடன் விடைகொடுத்துக் கொண்டிருக்கின்றது. புதிய வடிவம் பெறும் என் இதயத்தில் இப்போதெல்லாம் அவள் வடிவம் முழுமையை இழந்துகொண்டிருக்கிறது. புகையுண்ட ஓவியமாகிக் கொண்டிருக்கின்றாள். கூடிய விரைவில் அந்த ஓவியம் முழுவதுமாக மறைந்து கரைந்துவிடும்— அந்த நம்பிக்கை எனக்குத் தோன்றிவிட்டது. என்னைப் பொறுத்தவரை அவள் தூரத்துக் கண்ணாடி—ரசம்போன கண்ணாடியும்கூட, ஆகவேதான், அவளின் தோற்றம் சிறியதாகி விட்டது— அந்தச் சிறிய தோற்றம் யார் என்ற அடையாளம் காட்டவில்லை. அதிலே ஒரு நிம்மதி எனக்கு. பிறை நிலா நெற்றி— பாதரசம்போல உழலும் அவளின் விழிகள் — அவைகள் வழங்கிடும் நயனங்கள் — வள்ளல் நிலையில் நின்று வாரி இறைத்திடுவாளே அந்திவானச் சிரிப்பு-அவைகளின் பொலிவு கிளு கிளுப்பு எல்லாமே சுயவடிவம் இழந்துவிட்டன. அவள் மேனியளவில் உலவிட்ட இனிமையை அனுபவித்தவனும் நானே. மோன நிலையில் நின்று அவளின் உள்ளத்து உணர்ச்சிகளுக்கு பதில் சொல்பவனும் நானே.

இருந்தாலும் பழைய நினைவுகள் — இனியவைகளாக இருந்திட்ட இன்பத்தின் தொல்லைகள் —நெஞ்சத்தை வேலாகக் குத்திய வண்ணம் இருக்கின்றன. என்ன ஆண்டவன், நிகழ்ச்சிகளை மறக்க மருந்தொன்றை தந்திடக் கூடாதா? பாசத்தை ஏற்படுத்துகிறான் — அதன் முதிர்ச்சியில் காதல் என்ற கனியையும் மறக்காமல் கொடுத்திடுகிறான். காதலில் இரு வேறு உள்ளங்களைப் பிணைக்கும் பந்தத்தை ஏற்படுத்தி விடுகிறான். பந்தத்தையும் பாசத்தையும் முளைத்திடச் செய்த அதே ஆண்டவன், களை எடுப்பதற்கு பதிலாக முளைக்கு வித்தாயிருந்த காதலையே கருணையின்றி பிடுங்கி எடுத்துவிடுகிறான். முதலில் சொந்தம். அது ஏற்படுத்திய பாசம் பந்தமாக வடிவெடுத்தது அன்று. இன்றோ திக்குகள் அத்தனையிலும் நிதான எண்ணத்தோடு செலுத்தப்படும் என் மனவெளிச்சத்தில் அவள்உருவம் தலைகாட்டவில்லை. சொந்தம் இடமாற்றம் பெற்றால் பாசம் நிலைமாற்றம் கொள்ளும்போலும். பந்தம் அங்கே தானாக விடைபெற்றுக் கொள்ளுகிறது. "out of sight out of Mind" என்று ஒரு ஆங்கில வாசகம் எனக்கு என் மனதிற்கு ஒரு நிம்மதியைக் கொடுக்கிறது. நேரில் இல்லாதவர்கள்— நினைவில் நிற்கமுடியாதவர்களாகி விடுகிறார்கள்—ஒரு சில மனங்கள் இந்த ஆங்கிலத் தத்துவத்தை நிரூபித்துக் கொண்டிருக்கத்தான் செய்கின்றன.

அலுப்புத் தட்டிய மனம் — அதனால் ஏற்பட்ட அசதி. ஆகவே என் வீட்டு மொட்டை மாடியில் மல்லாந்து படுத்து வானத்து நிலவைப் பார்க்கிறேன் — நிலவுக்கு களங்கம் இருப்பதை இப்போது என்னால் உணர முடிகிறது. கசந்த மனப்பான்மை என்றும் நீக்கமற விடுபடவில்லை — தோட்டத்திற்குப் போகிறேன்—அன்று அவளின் வனப்புக்கு உவமையாக இருந்த ரோஜா என்னைப் பார்த்து கேலிச் சிரிப்பு சிரிக்கிறது.

ரசிப்பு — அதில் ஏற்படும் திகைப்பு — இனம் தெரியாததொரு கனிவு —: இவற்றிற்குப் பிறகு கசப்பு—ரசிப்பையும், கசப்பையும் கடக்க மனித மனம் நினைக்கும் நிலைக்கு மாற்றுப் பெயர்தான் புலம்பல். ரசிக்க புறப்பட்ட மன்ம் புலம்பலை சந்திக்கத்தான் வேண்டும் — அது ஆண்டவன் இட்ட சட்டம் — அதை என்னை மீறிவிடுவானா ஆண்டவன்!

மாறுபட்ட சில சட்டங்களையும் மனித இனம் படைத்துக் கொள்ளத் தவறவில்லை—உலகத்தைப் பொறுத்தவரை.

சட்டம்:- செல்வம் பெற்றோரின் தத்துப் பிள்ளை.

குற்றம்:- அநியாய மனங்கள் பெற்றெடுக்கும் நியாயமில்லாத குழந்தை.

தீர்ப்பு:- சந்தர்ப்பவாதி

நியாயம்:- முழுவடிவம் பெறாத குறை மாதக் குழந்தை.

நேர்மை:- பைத்யக்காரத் தனத்தின் மறு பெயர்.

நாணயம்:- மனித இனத்தால் துரத்தியடிக்கப்பட்ட அபலை.

தவறுகள்:- இதைவிட மலிவான பொருள் உலகில் கிடையாது. சிலவேளைகளில் இனாமாகக்கூட கிடைக்கும்.

நீதி:- "பாவம்" என்ற பெயரில் நாதியற்ற நிலைபெற்று 'காணாமல் போய்விட்டது. எத்தனையோ விளம்பரங்கள் செய்தித் தாள்கள் மூலமாகவும், வானொலி மூலமாகவும், ஏன் தண்டோரா மூலமும் விளம்பரம் செய்யப்பட்டு விட்டது. அடையாளம் கண்டறிந்து உரியவரிடம் ஒப்படைக்க கோரப்பட்டது. தக்க சன்மானமும் தாராளமாக தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுவிட்டது. அழகி சுமித்ரா தேவியாகி விட்டது.

கற்பு:- பேசும் நிலையழிந்த ஊமை —ரசம்போன கண்ணாடி.

விபச்சாரம்:- தடுக்கி விழும் இடமெல்லாம் மலிவு விலையில் தாராளமாகக் கிடைக்கும் கடைச் சரக்கு.

இப்படிப்பட்ட அநீதிகள் அக்ரமங்கள் உலகில் இருப்பதை மறந்துவிட்டானா ஆண்டவன். நிச்சயமாக இல்லை. பிரச்சனையை தீர்த்துக் கொள்பவர்களிடம் அமைதியைக் குலைத்திடுகிறான். ஆணவத்தை மோதவிடுகிறான். மோதலின் முடிவு வேடிக்கை பார்க்கும் மனிதர்களின் மனங்களுக்கு நியாய அநியாயங்கள் புரிகிறது. காரியத்தின் மூலம் காரணத்தை அறியச் செய்கிறான் —அதே நேரத்தில் நியாயத்தையும் விளக்குகிறான். நீதிமன்றங்கள் வழங்கிடும் தீர்ப்புகளில் நியாயம் உள்ளதோ இல்லையோ. மனச்சாட்சி அதன் தீர்ப்பை களங்கமின்றி கற்பித்தவண்ணமே இருக்கின்றன.

இதோ வீதியிலே தள்ளாடித் தள்ளாடி நடக்க முடியாமல் முயன்று கஞ்சிக் கலயத்தைக் கையில் ஏந்தி வயிற்றுப் பசிக்குப் புசித்திட ஒரு பிடி அன்னத்தை தானமாக கேட்கிறாளே அவளை அடையாளங் கண்டுகொள்ள முடிகிறதா உங்களால் — அன்று தன் அழகை விலைக்கு விற்றாளே அதே அன்னம்தான் இவள். அன்று இவளின் அழகில் மயங்கி அவளின் இளமைகளை அணு அணுவாக ரசித்திட்ட காமுகர்கள் எத்தனை பேர். அவள் வீசிட்ட மோகனப் பார்வையில் விடுபட முடியாத முட்டாள்கள் அவள் முகத்தோடு முகம் தேய்த்து காமத்தை வடித்தெடுத்தார்கள். விவரிக்க முடியாத காமத்தை விலைகொடுத்து வாங்கினார்கள். அவளும் கற்பை விலைக்கு விற்றாள். கயமைக்குத் துணை நின்றவள். காமுகர்களின் அடைக்கலப் பொருள். லோபிகளின் காசுகளுக்கு அவள் அழகு 'சன்மானம்.' சுகம் தேடி அலைந்தோர்க்கு அவள் சொர்க்கத்தின் நிலைக்களம். ஈன புத்திக்காரர்களின் நந்தா விளக்கு —சொந்த மதி படைக்காதவர்களின் சொர்ணப் பதுமை—சூது மதி படைத்தோர்க்கு அவள் ஒரு "சூத்ரதாரி." காமுகர்கள் அவள் உடலை கொஞ்சம் கொஞ்சமாக விலைகொடுத்து வாங்கிச் சென்று விட்டார்கள். அவளிடம் இப்போது மிஞ்சி இருப்பது எலும்பும் அதிலே ஒட்டிக்கொண்டிருக்கும் காய்ந்த சருகு போன்ற தோல் மாத்திரமே. பளபளப்பை வீசிய பற்களில் ஒன்றிரண்டைக் காணவே இல்லை—மின்வெட்டுப் பார்வை பிரியா விடை பெற்று விட்டது. மேலாடையை விலக்கி மேனியை மிளிரச் செய்து காட்டி பணம் பறித்திடுவது தனது தொழில் திறமை என நினைத்திருந்த அவளுடைய மேனி மினு மினுப்பு சூன்யத்தைவந்தடைந்து விட்டது. ஆண்டவன் நினைவு அவளுக்கு அப்போது தேவையற்ற ஒன்று. இன்றோ ஆண்டவா அனாதரட்சகா என்றவாறு ஆவி போக கூவிக் கூவி அழைக்கிறாள். ஆண்டவன் என்ன அவ்வளவு சுலபமான சேவகனா என்ன? கூப்பிட்டஉடனே குரல் கொடுக்க. கண் கெட்ட பின்பு சூரிய வணக்கம் செலுத்த முற்படுகிறது அவளின் மனம். சந்தை முடிந்த பின்பு சரக்கு வாங்கச் சென்றவன் கதைதான். இவளும் ஒரு சரித்திரமே. பெண்வர்கம் அறிந்து கொள்ளவேண்டிய வரலாறு, இவள் ஒன்றும் புதிய சரித்திரம் படைத்து விடவில்லை. பழய சரித்திரம்தான். நிகழ்ச்சிகளின் தொடர்சி மனங்களை தன் நிலைக்கு கொண்டுவரும் அல்லவா ஆகவே தான் நினைவு கூறவேண்டிய சரித்திரமாகி விட்டாள் இவள்.

என் அமுதாவிற்கு மட்டும் என்ன? ஆகாயத்தில் இருந்து அன்றைக்குதான் பதினெட்டு வயதோடு என் எதிரில் வந்து குதித்து விட்டாளா என்ன? மழைக்காக ஒதுங்கினேன் மங்கை அவளின் வீட்டில், அங்கே அமுதா என்ற சித்திரப்பாவை சிற்பி செதுக்காத சிலையாக இருந்திட்டாள், அவள். இளந்தளிர் மேனியள்—இனியவள், கனி அவள், என் இதயம் கவர நினைத்த மின்மினி என்றெப்படி என்னால் யூகிக்க முடியும் அந்த நிலையில் மழை பெய்து கொண்டிருந்தது— ஆனால் வானத்தில் மின்னல் இல்லை—என்ன காரணம்? என்று என்மனம் கேட்டபோது நான் ஒதுங்கிய வீட்டினுள் மின்னி மின்னி மறைந்தாள்—கதவருகே-சன்னல் அருகே—கொஞ்சம் நாட்களில் என் அருகே—மெள்ள மெள்ள என் நெஞ்சத்தில் என்னைக் கேட்காமலே குடியேறி விட்டாள். வாடகையாக தந்தாளே சுகம்—அதை எப்படி மறப்பது. இன்பத்தின் எல்லையை எங்களால் முடிந்த வரையில் தேடிப்பார்த்தோம்—புதியவர்கள் அல்லவா, பழக்கம் அதிகம் தேவைப்பட்டது—பழகப் பழக பால் புளிக்கும் என்பார்கள்— ஆனால் நாங்கள் பழகப்பழக வண்ண வண்ண அனுபவங்களைப் பெற்றோம்.

[அடுத்த இதழில் முடிவுறும்]



தொடர் கதை :

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

"பகைவன்! பகைவன்! சே. பகைவனை ஒழிக்க முடியவில்லையே பாலு!"

"முட்டாள்! பகைவனை ஒழிப்பது அறிவில்லை. பகைவனைத் தோல்வியுறச் செய்வதும், பகைவனை நமக்கே பணியாளனாக ஆக்கிக்கொள்வதும், பகைவனைவிட நாம் மேன்மையான நிலைக்கு உயர்ந்து ஓங்கி வளர்வதும்தான் பெருந்திறமையாகும். பண்டைக்கால அரசர்கள் இந்த உண்மையறியாமல் பகையை அழித்து மகிழ்ந்தார்கள்! உம்..."

"பாலு, எனக்குப்பற்றி எரிகிறது! நீ பண்டையரசர்...அது...இது என உளறுகிறாய்!"

"கொக்கு என்று முகிலன் உனக்குப் பெயர் இட்டதைச் சற்று மாற்றி 'மக்கு' என்று வைத்திருக்கலாம்."

"ஏன்? நீயே அவனிடம் சொல்லிவிடேன்."

"உம். கட்டாயம் சொல்வேன்."

"அம்மா! தாயே! பாலு! உன் விருப்பம்; என் மகிழ்ச்சி—"

பாலு சிரித்தவாறே வெளியே செல்ல முன் வந்தாள். அப்போது ஒரு இன்ப ஊர்தி பாலுவின் வீட்டின் முன்வந்து நின்றது. அதிலிருந்து அழகிய தோற்றமும் மேனாட்டுமுறையில் உடை; சாயல் அமைந்த நடுநிலை வயதுடைய ஒருவன் இறங்கி நின்றான்.

அவன் பார்வை பாலுவின்மீது பதிந்து இறுகி, உறுதியாக நிலைத்தது.

வண்டுவிழிகள் சிறகடிக்க, வண்ணமேனிச் செண்டுதுடி துடிக்க, உள்ளத்துணர்ச்சியின் வேர்கள் பரபரக்க பாலு வியப்புக்கடல் விழிகளில் வழிய வந்தவனைப் பார்த்தாள்.

"வரலாமல்லவா?" என நாகரிகத்தின் நயந்துளும் புங்குரலில் எடுப்பான தோற்றமுடைய விருந்தினன் வினவினான்.

"வாருங்கள், வாருங்கள்" என வரவேற்றாள் பாலு.

திகைத்து நின்ற கொக்கு, "நீங்கள் யாரென்று தெரியவில்லையே" எனச் சிறிதும் நாகரிகமில்லாமல் கேட்டுவைத்தான்.

பாலு விழித்தீயால் அவனைச் சுட்டெரித்தாள்.

"நான் ஆங்கிலப் பேராசிரியர், ஆடலரசு. என்னை 'ஆடல்' என எல்லாரும் அழைப்பார்கள்!"

"உங்களைச் சந்தித்ததில் மிக மகிழ்கிறேன். உள்ளே வாருங்கள். அமருங்கள்" என ஆங்கிலத்திலே வரவேற்ற பாலு உள்ளே சென்று மூன்று கிண்ணங்களில் தேனீரும் சிற்றுண்டியும் கொண்டு வந்து வைத்தாள்.

ஒருவெண் சுருட்டைப் புகைக்கத் தொடங்கி ஆடலரசு, கொக்குவினிடம் ஒன்றை நீட்டினான். அவனும் பெற்றுக்கொண்டு புகைக்கலானான்.

வெண்புகைச் சூழலும், புகைகுடியின் நெடியும் அந்தச் சூழ்நிலையை அடிமையாக்கின.

ஆறுஅடி உயரம்; அதற்கேற்ற கட்டுடல், முன்புற மிருந்து வாரிப் பின்புறமாக விட்ட தலை, காதருகில் அடர்ந்த மயிர், கனமான உதடுகள், கொழுத்த கன்னங்கள், நடுவே எழுந்து நெளிவுள்ள கூரிய குண்டான மூக்கு. சிவந்தநிறமேனி, கைகளில் அடர்ந்தமயிர், ஈயின் வரிசை ஒட்டியிருப்பதுபோன்ற மீசை, கனத்த மூக்குக்கண்ணாடி பூண்டதோற்றத்தில் ஈடுபட்டிருந்தாள் பாலு. காலையில் மழித்தமுகப் பகுதிகளில் பசுமைநிறம் பளிச்சிட்டது.

"எங்கோ படித்தது நினைவுக்கு வருகிறது. நாம் நம் செயல்களினால், நமக்குப்பிறகு வரும் புலவனோ, பேராசிரியனோ, எழுத்தாளனோ அரிய இலக்கியப் பாடலையேனும், வரலாற்று நூலையேனும், கதையையேனும் எழுதுவதற்கேற்ப வாழவேண்டும்! அப்படியெல்லாம் நம்வாழ்க்கைச் செயல்கள், நிகழ்ச்சிகள் அமைந்துவிடுகிறதா; என்ன? இல்லை ஆனால்... இன்று—இந்தச் சந்திப்பு அப்படிப்பட்டதாக இருக்கிறது."

"இலக்கியமாகவே பேசுகிறீர்கள்? நீங்கள்...?"

"சொந்தவூர் தஞ்சை, இப்போது அங்கே ஒன்றும் தொடர்பில்லை. சென்னையில்தான் இன்று வாழ்க்கை. உங்களையெல்லாம் பார்க்க வேண்டுமென்று சிலகாலமாகவே ஆவல் இருந்தது. வாய்ப்பு அமையவில்லை. சாத்தனார் போகவேண்டிய வேலை வந்தது ஆகவே திண்டிவனம் போகிறோமே; ஒரு 'பார்வை' உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமே என்று வந்தேன்."

கொக்குவுக்கு இன்னம் சூழ்நிலை பிடிபடவில்லை. அவன் தோற்றத்தின் எடுப்பில் பாலு மயங்கியிருந்தாள்.

"நீங்கள் சென்னையில் எந்தக் கல்லூரியில் பணி செய்கிறீர்கள்?,!

"அரசு கல்லூரியில்."

"உங்களை எங்கே பார்த்திருக்கிறேன் என எண்ணிப் பார்க்கிறேன்."

"உங்கள் பேச்சு பாட்டோவியமாக மலர்கிறதைப் பார்க்கிறேன். உருசிய இலக்கிய ஆசிரியர்கள் வாழ்வை அதன் இயல்பான வழியிலேயே கண்டு எழுதுவார்கள். உருசியரின் புலமை செய்யுள்

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


நயங்கனிந்தது என்பார்கள். பிரெஞ்சு எழுத்தாளர்கள் அவலங்களையும், நம் ஆவல்கள்—வெறிகள் ஏக்கங்களையும் அணுவணுவாக ஓவியமாக்குவார்கள். ஆனால் அவற்றினூடே ஏக்கத்தின் எதிரொலி நம் உள்ளத்தின் யாழ் நரம்புகளைத் தொட்டுத் தொட்டு உருக்கமென்ற இரக்க இசையை மீட்டுவதில் தவறுவதில்லை!''

"பேராசிரியரைச் சந்தித்ததில் மிக மகிழ்ச்சி. உங்கள் தொடர்பு இலக்கிய மணமுடையதாக இருக்கிறது. ஆனால் இன்னும் உங்களை யாரென்றே அறிமுகம் செய்துகொள்ள முடியவில்லையே?''

"அடடே! மறந்தே போனேன் சென்னையில் படித்த வட்டாரத்தில் அறிமுகம் வேண்டாத அளவுக்கு அறிமுகமானவன் நான். ஆடலரசு என்றால் எல்லாரும் அறிவார்கள் என்பதால் நான் என்னைப் பற்றிச் சொல்லிக்கொள்ள மறந்துவிட்டேன். பனம் பொழில் விடுதியின் உரிமையாளர் செங்குட்டுவன் என் நண்பன்—'' எனக்கூற முற்பட்டதுமே பாலுவின் முகத்தில் இருள்நிழல் படிந்து விலகியது.

"செங்குட்டுவன் அடிக்கடி பாலுவைப்பற்றி என்னிடம் பேசியிருக்கிறான். அதனால் பாலுவைப் பார்க்க வந்தேன். நீங்கள்தான் பாலுவின் அண்ணன் கொக்குவா?''

கொக்குவின் தலையில் தணலைப் போட்டது போலிருந்தது.

"உம்'' என்றான்!

பாலு 'கிளியோபாட்ராச் சிரிப்பை'ச் சிந்தினாள். உடனே ஆடலரசு மயங்கிப் போனான்.

"காதல் ஒரு போர்; இந்தப் போரைத் தொடங்குவது எளிது; ஆனால் காதற்போரை முடிப்பதுதான் இயலாதது என்பது எவ்வளவு உண்மை! பாலு, உன் பார்வைகளில் சேக்சுபியர் பாடல்களின் நயத்தையும், செல்லியின் பாடல்களிலுள்ள எழுச்சியையும், கீட்சின் பாடலிலுள்ள சந்தநயத்தையும், ஓமர் இலக்கியத்தின் ஆழத்தையும், மில்டன் பாடலின் பெருமிதத்தையும் காண்கிறேன். கனவுகளைப் பரப்பும் கலைக் கண்களின் கனவுவழியும் மயக்க மூட்டும் மலர்ச்சியும் முகிழ்வும் அடடா! என்னுயிரையே பறித்து விட்டதே!''

பாலு அயர்ந்து போனாள். நேரிடையாக, கூச்சமின்றி, சூழல்—இடம் தெரியாமல் தன்னுள்ளுணர்ச்சிகளைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைப்பதைக் கண்டு அதிர்ந்தாள்.

கொக்கு நிலைதடுமாறினான் என்ன இது? திடுமென 'ஒரு தடியன்' வீட்டேறி வந்து தன்முன்னாலேயே தனது காதல் நாடகத்தைத் தன் தங்கை

யிடம் அரங்கேற்றுவதாவது! சுரீர் என்ற உணர்ச்சி உடல் முழுதும் பரவியது. ஆனால், உடனே 'சில்' லிட்டுவிட்டது.

பாலுவே இதைக் கேட்டுக்கொண்டு சுவைத்து மகிழ்வதைக் கண்டபிறகு 'அண்ணனன்' தனக்கு ஆற்றுமை வந்து பயன் என்ன என எண்ணி 'வெறும்' பார்வையாளனுனன்!

பேசத் தெரியாமல் இருவரும் பாவைகளைப் போல அமைதியாக இருக்கவே ஆடலரசு இருவரையும் கூர்ந்து நோக்கினன்.

"என் வருகை உங்களுக்கு விருப்பமில்லை போலிருக்கிறதே? சேச்சே மன்னிக்கவும். நான் வருகிறேன்—" எனத் திரும்பினன்.

பாலு பதறினள். "நில்லுங்கள் பேராசிரியர் அவர்களே, நாங்கள் உங்கள் வருகையை விரும்புகிறோம். ஏன் அண்ணா, அவரை அமரச் சொல்லேன்" என்றாள்.

"ஆங்...ஆமாம். பேராசிரியரே, அமரும்" என்றான் கொக்கு.

வாய் உமிழ்நீர் முழுதுமே வறண்டுவிட்டது அவனுக்கு!

"பேராசிரியரே, உங்களைப்போல வெள்ளை உள்ளத்தோடு மனத்தில் பட்டதைப் பட்டென்று பேசுபவரைக் கண்ட மகிழ்ச்சியினலும் வியப்பினலும் திகைத்துவிட்டோம்."

"ஆங். ஆம். உண்மையைக் காணும்போது வியப்பும் திகைப்பும் விளைவதியற்கை. அதேபோல அழகைக் கண்டபோது ஆரா இன்பமும் பாட்டும் கலையும் பிறப்பது இயற்கை. அதனல்தான் பாலு, உன்னைக் கண்டதும் என்னையறியாமலே மெய்மறந்து உன்னழகைச் சுவைப்பவனகவும் அதைச் சொல் விருந்துபடைப்பவனகவும் ஆகிவிட்டேன். பெர்னர்டு குரும் என்ற ஆசிரியன் என்ன சொல்கிறான் தெரியுமா? "The eye and ear of the poet are creative as well as receptive" என்கிறான். 'புலவனின் கண்ணும் காதும் சுவைத்துணர்வது போலவே படைத்தளிக்கவும் வல்லவை என்கிறான்!"

"பேராசிரியர் அவர்களே! உட்கார்ந்து பேசுங்கள்! கொக்கு, நீ கடைக்குப்போய்..."

"வேண்டா. நான் எனக்கெனத் திட்டமிட்டுச் செய்யப்பட்ட உணவைத்தான் உண்ணுவது வழக்கம். கண்டதைக் கண்டபடி கண்ட நேரத்தில் கண்டவர்களோடு உண்ணுவதைக் கண்டிப்பவன்."

"உங்கள் விருப்பத்திற்கேற்ற உணவையே ஏற்பாடு செய்யலாம்."

(வளரும்)


வெளிவருகிறது!

# 'காஞ்சி'

## அறிஞர் அண்ணு நினைவு–பொங்கல் சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணுவின் படைப்புக்களுடன்

கழகத் தலைவர் கலைஞர்

கழகப் பொதுச்செயலாளர் நாவலர்

அமைச்சர் பெருமக்கள் அருந்தமிழ்ச் சான்றேர்கள்


பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் — ஏ. கே. வில்லம்
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் — மணிவேந்தன்
டாக்டர் சாலை. இளந்திரையன் — பல்லவன்
குருவிக்கரம்பை சண்முகம் — தமிழ்ச் சுரபி
அரிமதி தென்னகன் — தி. நா. அறிவுஒளி
இரா. கண்ணிமை — தாமரைக்கண்ணன்
கருமலைப் பழம்நீ — ஆத்தூர் பன்னீர்ச்செல்வம்
எழிற்கோவன் மற்றும்

இளைய தலைமுறையின் இலட்சிய எழுத்தாளர்கள்

அனைவரின் எழுத்தோவியங்களைத் தாங்கி - எழில்மிகு மூவண்ண முகப்போடு வெளிவரவிருக்கிறது.

மேலாளர், விவரங்கட்கு:
"காஞ்சி" அலுவலகம் : : காஞ்சிபுரம்-3.

# நமக்கும் நல்லது!
# நாட்டுக்கும் நல்லது!



## பன்னிரண்டு ஆண்டுகளில்
## வருவாய் இரட்டிப்பாகிட
## தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

**குடும்பநலத் திட்டம்**

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.